**DEPOSTITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,**

**NAGERCOIL**

**O.S No. 87 of 2016**

பெயர் - பஞ்சரத்தினம் வா.சா.1

கணவர் பெயர் - சசிகுமார்

கிராமம் - நீண்டகரை

வட்டம் - அகஸ்தீஸ்வரம்

தொழில் - இல்லத்தரசி

வயது - 60

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 10.02.2022

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கோவிலுக்காக விலைக்கு கொடுத்ததாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் எந்த கோவிலுக்கு கொடுக்கப்பட்டது என்றால் ஊசிக்காட்டான் கோவிலுக்கு கொடுக்கப்பட்டது. அந்த கோவிலுக்கு சுடலை மாட சாமி கோவில் என்று இன்னொரு பெயர் உள்ளது என்றால் இல்லை. ஊசிக் காட்டான் கோவில் தாவா சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் நாங்கள் முதலில் வாங்கிய 15 சென்ட்டிற்கு வடக்கு பக்கம் உள்ளது. இராமகிருஷ்ணன் என்பவர் கோவிலுக்கு 5 சென்ட் நிலத்தை இஷ்ட தானமாக கொடுத்துள்ளார் என்றால் சரி தான். நான் அந்த கோவிலுக்கு சாமி கும்பிட போவேன் என்றால் இல்லை. தாவா சொத்திற்கு பக்கத்தில் உள்ள கோவில் பெயர்

என்ன என்றால் அந்த கோவில் எங்களது நிலத்தில் உள்ளது. கோவில் போல இல்லை. பீடம் மட்டுமே உள்ளது. காட்டுக் கோவில் என்று சொல்வார்கள். காட்டுக் கோவில் எங்களது சொத்தில் உள்ளதாக பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல. கோவிலாக இல்லை என்பதால் சொல்லவில்லை. காட்டுக் கோவிலுக்கு செல்வதற்கு ஊர் மக்கள் 3 அடி பாதை வழியாக தான் போவார்கள் என்றால் சரி தான். வா.சா.ஆ.15 ல் ராமகிருஷ்ணன் என்பவரின் மற்றொரு மகள் பெயர் வனஜா என்று கூறப்பட்டுள்ளது என்றால் தற்போது தான் தெரியும். அவரது பெயர் ஷோபா என்று நினைத்திருந்தேன். வா.சா.ஆ.9 லும் ராமகிருஷ்ணனின் மகள் பெயர் வனஜா என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 ல் கடைசி பக்கம் கிழிக்கப்பட்டுள்ளது என்றால் நான் ஓலைக் குடிசை வீட்டில் இருந்த போது எலி கடித்திருக்கும். வா.சா.ஆ.11 ஐ வழக்கு தாக்கல் செய்யும் போது தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் நகல் ஆவணத்தை தாக்கல் வழக்கு தாக்கல் செய்த போதே தாக்கல் செய்திருந்தேன். வா.சா.ஆ.11 உண்மையான ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.